**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| O.S. No. 82/2012 | Date : 03.01.2024 | DW1 |
|---|---|---|
| Name: புஷ்பராஜ் | S/o. காளியண்ணன் | |
| Evidence Recorded Time: 12.46 P.M. to 01.00 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனது தாயார் உயிருடன் இருந்த காலங்களில் எங்கு வேலை செய்து வந்தார் என்றால் கூட்டுறவு சொசைட்டியில் வேலை செய்து வந்தார். வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் குமரவேல் என்பவர் என் அம்மாவிற்கு பணம் கொடுத்ததாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் அம்மா இறந்த பிறகு எங்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளார். வாதி எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், அவர் பெரியசோரகையை சேர்ந்தவர் என்று இந்த வழக்கில் ஆஜரான பிறகு தெரிந்து கொண்டேன். வாதியின் அண்ணன் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. என்னுடைய பிரமாண பத்திரத்தில் வாதியின் அண்ணன் பெயர் முருகேசன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த முருகேசன் என்பதை நானோ, எனது அம்மாவோ பார்த்துள்ளோமா என்றால் எனக்கு தெரியாது, என் அம்மாவிற்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் என் அம்மாவிற்கு முருகேசனை தெரியாது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தவறுதான். என் அம்மாவிற்கு முருகேசனை எப்படி தெரியும் என்றால் அவர் அம்மா வேலை பார்த்த வங்கியின் வாடிக்கையாளர் ஆவார். என்அம்மா தனிப்பட்ட முறையில் முருகேசனிடம் வரவு செலவு வைத்திருந்தாரா என்றால் என் அம்மா முருகேசனிடம் சீட்டு போட்டிருந்தார். யார் சீட்டை நடத்தினார்கள் என்றால் முருகேசன் நடத்திய சீட்டில் என் அம்மா இருந்தார். என் அம்மா சீட்டிற்கு செலுத்திய பணத்தை முருகேசன் திருப்பி தரவில்லை. அதனால் என் அம்மாவிற்கும், முருகேசனுக்கும் பகை ஏற்பட்டா என்றால் இல்லை வாக்குவாதம் ஏற்பட்டது. மேற்படி விவரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் அம்மா சொல்லி தெரியும். மேற்படி விவரங்களை என் அம்மா எப்போது சொன்னார்கள் என்றால் இந்த வழக்கு சம்மந்தமாக என் அம்மாவிற்கு சம்மன் வந்தபோது என் அம்மா என்னிடம் சொன்னார். என் அம்மா எவ்வளவு சீட்டு போட்டார் ரூ.25,000/- ற்கு சீட்டு போட்டார் அதற்கான பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. பணம் கொடுக்காது சம்மந்தமாக என் அம்மா நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. மேற்படிசீட்டை தவிர வேறு வரவு செலவுகள் உள்ளதா என்றால் இல்லை. புரோநோட்டில் உள்ளது என் அம்மாவின் கையெழுத்து என்றால் என் அம்மா கையெழுத்து

எதுவும் போடவில்லை. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து என்பதை நிரூபிக்க நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்துள்ளோம். இந்த வழக்கில் என் அம்மா என்ன பதில் போட்டுள்ளார் என்றால் தெரியாது. பதிலுரையில் என் அம்மா முருகேசனிடம் ரூ.10000/– கடன் வாங்கியதாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. முருகேசனிடம் கடன் ரூ.10,000/– வாங்கும் போது கந்துவட்டி நோட்டில் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு வாதிக்கும், என் அம்மாவிற்கும் இடையே நடந்த பணப்பரிவர்த்தனை பற்றி தெரியாது என்றால் சரிதான். வழக்கு பற்றி என் அம்மா எதுவும் என்னிடம் சொல்லவில்லை என்றாலும், இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. அதனால் தான் நான் ஒரு பதிலுரையையும், என் அம்மா ஒரு பதிலுரையையும் முன்னுப்பின் முரணமாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி யார் என்று என் அம்மாவிற்கு தெரியும் என்றால் சரியல்ல, என் அம்மா கடந்த 18.10.2009–ம் தேதியில் வாதியிடம் ரூபாய் ஒரு லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக தாவா புரோநோட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, என் அம்மா யாரிடமும் கடன் வாங்கவில்லை. என் அம்மா வாதியிடம் கடனை பெற்றுக்கொண்டு அதற்கு அசலும், வட்டியும் செலுத்தாத காரணத்தினால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா தொகையை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன என் அம்மாவிற்கு நானும், என் அண்ணன் மகேந்திரனும்தான் வாரிசுள் என்றால் சரிதான். என் அம்மா இறந்துபோனதால் என் அம்மாவின் சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். இறந்தபோன என் அம்மா தாவா தொகையை குடும்ப செலவிற்காக தான் வாங்கினார் என்றாலும், அதனை குடும்பத்திற்குதான் பயன்படுத்தினார் என்றாலும், என் அம்மா இறந்துவிட்டதால் அவரது வாரிசான நாங்கள்தான் தாவா தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.